வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்குஎண். CC 48/2021

வழக்குசாட்சி LW8/PW5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சம்பத், உதவி ஆய்வாளர் வி7 நொளம்பூர் காவல் நிலையம் | ஜாதி | |
| கணவர்/தந்தை | வீரராகவன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 58 |

தேதி 01.04.2026

எதிரி ஆஜர்.

சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது வி7 நொளம்பூர் காவல் நிலையம் குற்றப்பிரிவில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். நான் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆவேன். கடந்த 12.09.2020 ம் தேதி காலை 8 மணிக்கு நிலைய ஆஜரில் இருந்த போது திரு. மணிகன்டன் என்பவர் அளித்த புகாரினைப் பெற்று சமுதாய பதிவேடு எண். 644/2020 வழங்கி விசாரித்து 22.09.2020 அன்று காலை 8 மணிக்கு எம்3 புழல் காவல் நிலைய குற்ற எண். 2717/2020 , சட்டப்பிரிவு 380 இதச ஆக வழக்குப்பதிவுச் செய்தேன்.

முதல் தகவல் அறிக்கை அ.த.சா.2 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் மணிகண்டன், அசோக்குமார், சுரேஷ்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். பின்னர் சாட்சிகள் ரமேஷ், துரைபாபு என்பவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை

மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா. 3, 4 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

பின்னர் வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி சுகுமார் என்பவரை கதிர்வேடு மேம்பாலம் அருகே காலை 11 மணிக்கு கைது செய்து அவர் தன்னிச்சையாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ஹேம்நாத், விமல்குமார் ஆகியோர் முன்னிலையில் பதிவுச் செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா. 5 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. அதனடிப்படையில் இவ்வழக்கின் சொத்தான கைப்பற்றுதல் மகஜரில் அதே சாட்சிகள் முன்பு எதிரியின் வீட்டில் இருந்து கைப்பற்றினேன். பின்னர் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி வழக்கின் புலன் விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

குறுக்கு விசாரணை

காலதாமதமாக தான் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பக்கத்து வீட்டுக்காரர் கூறி தான் புகார்தாரர் டீவி காணவில்லை என்பது தெரியும் என்றால் எனக்கு தெரியாது. காலதாமதமாக எதிரி இவ்வழக்கில் குற்றவாளியாக சேர்க்கப்பட்டார் என்றால் ஆமாம். கைது செய்யும் போது எதிரி ஆட்டோவில் கதிர்வேட்டிலிருந்து விநாயகபுரத்திற்கு செல்கிறார் என்றால் ஆமாம். சந்தேகத்தின் பேரில் தான் எதிரியை காவல் நிலையம் அழைத்துச் சென்றோம் என்றால் ஆமாம். புகார்தாரர் இக்குற்றச் சம்பவத்திற்கு இரண்டு புகார் அளித்துள்ளார் என்றால் ஆமாம். புழல் அரசு பள்ளியில் 5 டீவிகள் காணாமல் போனதாக தலைமை ஆசிரியர் அந்த காலகட்டத்தில் புகார் அளித்தார் என்றால் இல்லை. சாட்சிகள் புகார்தாரரின் உறவினர்கள் என்றால் இல்லை. சீசர் மகஜர் சாட்சிகள் எங்களது கையிருப்பு சாட்சிகள் என்றால் இல்லை. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் எதிரி மீது ஏற்கனவே வழக்கு நிலுவையில் இருந்தால் இந்த வழக்கையும் அவர் மீது பதிவுச் செய்தோம் என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து டீவி கைப்பற்றியிருந்தால் அதனை

நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்போம் என்றாலும் அவ்வாறு கைப்பற்றப்படாததால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் புள்ளிவிவரத்திற்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை நீதிமன்ற அனுமதியுடன்**

இந்த வழக்கில் புகார்தாரர் ஒரு புகார் தான் அளித்துள்ளார் என்றால் ஆமாம். அந்த புகாரில் தான் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம்.

**குறுக்கு விசாரணை**

இரண்டு புகார் தான் புகார்தாரர் அளித்தார் என்றால் சரியல்ல. சம்பவம் நடக்கவில்லை என்றாலும் எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**